www.tamilarangam.net

பொதுமை

# நாடற்றவர் நிலை என்ன?

**இலங்கையில் நான்கு லட்சம் பேர் நாடற்றவர்களாகியுள்ளனர்.**

*— சென்னையில் அமைச்சர் தொண்டமான்*

**தோட்டத் தொழிலாளர்களுக்கு புதுவித அடையாள அட்டை**

*— தொழிலாளர் தேசிய சங்கம் ஆட்சேபம்*

**தோட்டங்களைத் தனியார் கைக்கு மாற்றும் யோசனையை எதிர்ப்போம்.**

*— டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா*

**அறுபது இளைஞர்களின் விடுதலைக்காக ஆறுலட்சம் தொழிலாளர் களத்தில் குதிப்பர்.**

*— இ. தொ. கா. பொதுச் செயலர் செல்லச்சாமி எச்சரிக்கை*

**மலையக மக்கள் இன்று அனுபவிக்கும் ஒவ்வொரு உரிமையும், சலுகையும் பலத்த போராட்டத்தின் பின்னும், அளப்பரிய தியாகங்களின் பின்னும் கிடைக்கப்பெற்றவை என்பதை எவரும் மறுக்க முடியாது.**

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் முதுகெலும்பான மலையகத்தின் தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம் குறித்து இம் மக்களின் நலனில் அக்கறையுள்ள எவரும் அலட்சியமாக இருந்துவிட் முடியாது. அதுவும் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் சிக்கலான பிரச்சனைக்கு 'அரசியல் தீர்வு' காண திம்புமுதல் பகாமாஸ் ஈருக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் இக்காலகட்டத்தில் நாடற்ற மக்களின் எதிர்காலம் குறித்து அலச வேண்டியது அத்தியாவசியமானது. வடக்கும், கிழக்கும் இணைந்த மாநில சபை ஒன்றின் மூலம் ஈழவரின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட ஒருபுறத்தில் முயற்சி நடக்கிறது. வடக்கும், கிழக்கும் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற இறுமாப்பான பதில் மறுபுறத்தில் கிடைத்தாலும் சமரச முயற்சிகள் தொடர்கின்றன. இந்த நிலையில் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட மலையக மக்களின் எதிர்காலம் என்னவாக இருக்கமுடியும் என்பதே தற்போதைய கேள்வி.

## இதுவரை நடந்தவை

இலங்கைக்கு 'சுதந்திரம்' என்ற பெயரில் அதிகாரக் கைமாற்றம் நிகழ்ந்த உடனேயே தமிழ்பேசும் மக்களுக்கு குழிபறிக்கும் வேலைகளும் ஆரம்பமாகின. தமிழைப் பேசுபவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக மலையகத்தைச் சேர்ந்த பத்து லட்சம் தோட்டத்தொழிலாளர்களும் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். அவர்களது வாக்குரிமையும், வதியும் உரிமையும் பறிக்கப்பட்டன. இதன் பயனாக இந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இவர்கள் அரசியல் அனாதைகளாக்கப்பட்டனர். அப்போது வோட்டுப் பொறுக்கி இடதுசாரிக் கட்சிகள் கூட தொழிலாளர் வர்க்கமாக இனங்காணப்படும் இவர்களுக்காக போராட்டத்தை முன்னெடுக்கத் தவறிவிட்டனர். இந்தத் தொழிலாளர்களை இங்கு தருவிக்க டில்லிவரை சென்று இரந்து கேட்ட D.S.சேனநாயக்கா போன்ற சிங்களக் 'கனவான்கள்' அவர்களது முதுகில் குத்தித் தமது சிங்கள, பௌத்த பேரின வாதத்திற்கு வித்திட்டனர்.

நாடற்றவர்களாக்கப்பட்ட இம் மக்களை நாடுகடத்த D.S.சேனநாயக்காவும், அதன்பின்னர் பல பிரதமர்களும் எடுத்த முயற்சிகள் சிலகாலம் வரை வெற்றியளிக்கவில்லை. இலங்கைத்தீவை வளம்கொழிக்கும் சொர்க்கபுரியாக மாற்ற உதிரத்தையும், வியர்வையையும் மட்டுமல்லாது உயிரையும் இழந்த இந்தத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டது கொடுமை என நேரு காலத்தில் இந்தியா நன்குணர்ந்தது. **இந்த மக்கள் இந்நாட்டின் சொந்தக்காரர்கள். அவர்களுக்கு இங்கு வாழவும், தமது வாழ்வை மேம்படுத்தப் போராடவும் உரிமை உண்டெனத் தெளிவாகக்கூறினர் நேரு.** இந்த மக்களை கட்டாயமாக இந்தியாவுக்கு நாடுகடத்த எடுக்கப்பட்ட முயற்சிகளை ஏற்றுக்கொள்ள உறுதியாக மறுத்தது இந்திய அரசு.

ஆனல் நேருவுக்குப் பின்னர் பதவியேற்ற, சாஸ்திரி இந்த மக்களின் அபிலாசைகளைப் பொருட்படுத்தாமல் இந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களின் விருப்புகளைக் கேட்டறியாமல் சிறிமாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். காகிதத்தில் போடப்பட்ட கையெழுத்துகளால் இந்த மக்களின் தலையெழுத்து நிர்ணயிக்கப்பட்டது. கட்டாய நாடுகடத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

பிறந்து வாழ்ந்த மண்ணை— தவழ்ந்து திரிந்த மலைகளை—தமது உழைப்பால் வளப் படுத்திய பூமியை விட்டு வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டது ஒரு மக்கள் கூட்டம். 'தாயகம் திரும்புவது' என்ற அழகான வார்த்தையின்பின்னல் இலங்கைஅகதிகள் என்ற பட்டப்பெயர் சூட்டப்பட்டது இவர்களுக்கு. தாயகம் என்று நம்பிய மண்ணில் நாயினும் கீழான வாழ்வே இவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது ஆந்திராவின் குண்டக்கல், நெல்லூர் போன்ற இடங்களுக்கும், கேரளாவின் வண்டிப்பெரியாருக்கும், ஏன் தமிழகத்தின் கொடைக்கானல், நீலகிரிமலைகளுக்கும் சென்று பார்க்கும் எவரும் புரிந்து கொள்ளலாம்.

## தமிழ்த் தலைமைகளின் துரோகத்தனம்

48 இல் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அற்ப மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலமும், அவரது அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசும் அரசாங்கத்திற்கு ஒத்தூதினர். ஐம்பதுக்குஐம்பது பிரதிநிதித்துவம் கோரி வாய்ச்சவடால்களை விட்டெறிந்த இந்தக் கும்பல் தமிழ்பேசும் பிரதிநிதிகள் எட்டுப்பேர் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறக் காரணமாகினர். அப்போது தமிழர்களுக்கு பொன்னம்பலம் துரோகமிழைத்ததைச் சுட்டிக்காட்டி காங்கிரசிலிருந்து வெளியேறிய செல்வநாயகமும், அவரது சகாக்களும்கூட வாக்குரிமை பறிக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக அந்த மக்களோடு இணைந்து போராட்டம் நடத்தத் துணிந்தாரில்லை. வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு சமஷ்டிகோரிய செல்வநாயகம், மலையக மக்களின் பிரச்சனைகளை அலசிப்பார்த்து அவர்களுக்குத் தகுந்த தீர்வுகாண முனையவில்லை. இதனல் மலையகமக்கள் தேசிய ஓட்டத்திலிருந்து மட்டுமல்ல, அரசியல் வாழ்விலும் ஒதுக்கப்பட்டனர், ஒடுக்கப்பட்டனர். அவர்களது போராட்டங்களையும், கோரிக்கைகளையும் தொழிற்சங்க மட்டத்தில் குறுக்கிப் போட்டனர். இதன் பயனக சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டபோதுகூட அதனை எதிர்க்கும் துணிவையும், தெம்பையும் இழந்திருந்த இம்மக்களை ஆடு, மாடுகளைப்போல ஏற்றி நாடு கடத்தினர். அப்போதும் தமிழர்களின் நலன்களைப் பிரதிபலித்ததாகப் பீற்றிக்கொண்ட கட்சிகள் மௌனமாயிருந்து தமது சம்மதத்தை வழங்கி அந்த மக்களுக்கு மீண்டும் துரோகமிழைத்தன.

## மலையக மக்களின் எதிர்காலம்

இவ்வாருக ஆட்சிபுரிந்த அரசாங்கங்களினுலும், தமிழ்த்தலைமைகளின் துரோகத்தனத்தாலும் அல்லற்பட்ட இம்மக்களே இனவெறிக்கு பலியாக்கப்பட்டனர். இனக்கலவரங்கள் மூண்டபோதெல்லாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, அகதிகளாக்கப்பட்டு அல்லற்பட்டனர். இந்த அவலநிலைமைகள் மாற அவர்களும் இம்மண்ணில் மனிதர்களாக வாழ பல்வேறு தீர்வுகள் இன்று அவர்கள் முன்னல் வைக்கப்படுகின்றன. அனைவரும் இந்தியாவிற்கே ஓடிவிடட்டும் என்கிறது அரசாங்கம் மலையகத்தை விட்டு வடக்கிற்கும், கிழக்கிற்கும் வாருங்கள், வளமான எதிர்காலம் உமக்காக நாம் தருவோம் என்கின்றனர் ஒருசாரார். இந்த இருவகைத் தீர்வுகளும் பார்வைக்கு வித்தியாசமாய்த் தென்பட்டாலும் உள்ளடக்கத்தில் ஒன்றேதான். **அவர்களால் வளப்படுத்தப்பட்ட மண்ணிலிருந்து— தமது இரத்தத்தாலும், வியர்வையாலும், செழிப்பாக்கிய பூமியிலிருந்து அப்புறப்படுத்தும் ஆளும் வர்க்கத்தின் சதிச்செயலின் வெளிப்பாடுகளே.** "வாருங்கள்! வடக்கிலும், கிழக்கிலும் குடியேறுங்கள்!!" என்பது அந்த மக்களின் போராட்ட உணர்வைக் கொச்சைப்படுத்தும் ஒன்று மட்டுமல்ல— இத்தகைய — வரவேற்கும் கனவான்களின் எஜமான மனோபாவத்தின் வெளிப்பாடும் ஆகும்.

எனவே **அந்த மண்—அந்த மக்களால் வளப்படுத்தப்பட்ட மலையகம் அவர்களுக்கே சொந்தமானது.** அவர்களது இன்பமும், துன்பமும், வாழ்வும், வளமும், ஈழத்தின் நலன்களோடு இறுகப் பிணைந்தது. ஈழப்போராட்டத்திலிருந்து அவர்கள் வேறுபட்டவர்களுமல்ல - ஈழவிடுதலை அவர்களிலிருந்து அந்நியப்பட்டதுமல்ல.

## புதியதொரு இளைய தலைமுறை

ஈழப் போராட்டம் கருக்கொள்ள ஆரம்பித்தபோதே மலைமுகடுகளிலும், எதிரொலித்துத் தடம்பதிக்கத் தவறவில்லை. 73 ல் அப்பாவிகளான தமிழிளைஞர்கள் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அதனைக் கண்டித்து பண்டாரவளையிலும், அட்டனிலும், நுவரெலியாவிலும், பதுளையிலும் இடம்பெற்ற உண்ணாவிரதங்களும், ஆர்ப்பாட்டங்களும் இதற்குச் சான்ருகும். இதன் பின்னர் 76 ல் நட்சா என்ற பெயரில் மாற்றுப் பயிர்ச்செய்கை என்ற போர்வையில் சிங்களவர்களைக் குடியமர்த்த முயற்சிகள் எடுக்கப்பட்டபோது இடம்பெற்ற போராட்டங்கள் அந்த மண்மீது அவர்கள் கொண்டுள்ள பாசத்தின் வெளிப்பாடுகள். சங்குவாரித் தோட்டத்தில் சிங்களவர்களைக் குடியமர்த்த முயற்சி எடுத்தபோது அதனை எதிர்த்த டெல்டா, டெவன் தோட்டங்கள் அரச கூலிப் படையினரால் எரியூட்டப்பட்டதையும், அதனையும் மீறி எதிர்த்த சிவனு —லட்சுமணன் சுட்டுக்கொல்லப்பட்டதையும் இத்தருணத்தில் நினைவு கூறுதல் பொருந்தும்.

தொடர்ச்சி: 4-ம் பக்கம்...

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## இஸ்லாமியர் எந்தப் பக்கம்...?

### இஸ்லாமியர்களை வெளியேறுமாறு மிரட்டல்

அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஒலுவில் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வாழும் இசுலாமிய மக்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு சிங்களக் குண்டர் கோஷ்டி ஒன்று மிரட்டி வருகிறது. இதனால் கிழக்கில் சிங்கள-இசுலாமிய கலவரம் ஒன்று ஏற்பட வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இவ்வாறான மிரட்டல் நடவடிக்கைகளுக்கு தீகவாபி பகுதியில் உள்ள ஊர்க்காவல்படையினரும், ஆயுதப்படையினரும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. மேற்படி நிலைமைகளைச் சுட்டிக்காட்டி ஒலுவில் கிராமோதய சபை ஜனாதிபதிக்கும், தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கும் 02-10-85 அன்று அவசரத் தந்தியொன்று அனுப்பி வைத்துள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய இன ஆதிக்கப் போக்கினைக் கண்டிக்கும்மேற்படி மக்கள், தங்கள் பாரம்பரிய பிரதேசங்கள் பறிபோகாமல் தடுக்கும்படி இசுலாமிய அமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். □

### தமிழ் முஸ்லீம்களைப் பிரிக்க சதி முயற்சி! விழிப்பாக இருக்குமாறு திருமலை முஸ்லீம் பிரமுகாகள் கோரிக்கை

மூதூரில் இடம் பெற்ற அசம்பாவிதங்களை அடுத்துப் பரப்பப்பட்ட பொய்ப் பிரச்சாரங்களினால் திருகோணமலையில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே பதட்டம் நிலவிய போதிலும் தற்போது சுமுகமான நிலை தோன்றியுள்ளது.

இதையடுத்து திருகோணமலை மூர் வீதியில் உள்ள பள்ளிவாசலில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் முஸ்லீம் பிரமுகர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர். தமிழ் பேசும் இரண்டு சமூகங்களையும் மீண்டும் பிரித்து வைப்பதற்கான முயற்சிகளை நாம் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் எனவும், எமது மத்தியில் ஒற்றுமையைப் பேணுவதற்கு அனைவரும் ஒன்று பட வேண்டும் எனவும் மேற்படி பிரமுகர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க, தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்தும் விதத்தில் திருமலை நகரப் பகுதிகளில் அநாமதேயத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப் படுகிறதாம். தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட மேற்படி பிரசுரங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் மக்கள் மீது பழிவாங்கப்படும் எனவும், அதனால் தமிழ் மக்கள் அனைவரும் பாதிக்கப்படுவர் எனவும் அச்சுறுத்தப்பட்டுள்ளது. □

### மன்னாரில் இஸ்லாமியர் படுகொலை

மன்னார் மாவட்டத்திலுள்ள உயிலம்குளம் பகுதியில் இராணுவத்தினர், பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். 7-10-85 அன்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஒன்பது பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அப்பாவிகளான இப்பொதுமக்களில் அறுவர் இஸ்லாமியர் என்பது குறிப்பிடத்தக்கது. □

### மூதூரில் இஸ்லாமியர் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம்

14-10-85 அன்று மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மல்லிகைத்தீவு என்னும் கிராமத்தில் வேளாண்மை அறுவடைக்காகச் சென்ற இசுலாமியக் கூலி விவசாயிகள் மீது அரசு இராணுவமும் ஊர்க்காவற்படையினரும் சேர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இச் சம்பவத்தில்,

1. அப்துல் கமீத் அன்சார் (வயது 23) ஜின்னா நகர்
2. முகமட் சவ்றீவ் (வயது 21) ஜின்னா நகர்
3. பக்கீர்குட்டி சலீம் (வயது 28) பால நகர்
4. சேகு முகமட் ராசாத்தம்பி (வயது 48) பால நகர்
5. மஸ்தான் நசீம் (வயது 18) பால நகர்

ஆகியோர் பலியாகியுள்ளனர். மேற்படி சம்பவத்தில் மயிரிழையில் உயிர்தப்பிய ஒரு இசுலாமியக் கூலி விவசாயி இச்சம்பவம் பற்றி பின்வருமாறு விவரிக்கிறார்:

சம்பவதினத்தன்று நானும் மற்றும் மரணமான அனைவரும் வேளாண்மை வெட்டுவதற்காக மல்லிகைத் தீவின் உட்பகுதிக்குச் சென்றோம். எதிர்பாராத விதமாகச் சிங்களவர்கள் துப்பாக்கியுடன் எம்மை நோக்கி ஓடி வந்தனர். மூவர் என்னுடன் அந்த ஐந்து பேரையும் வளைத்துப் பிடித்தனர். சுமார் 50 யாருக்கு அப்பால் ஏறத்தாழ 20 இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர். ''இப்போது சுடத்தேவையில்லை. அங்கு கொண்டுபோவோம்'' என இராணுவத்தினர் சிங்களத்தில் சொன்னதைப் புரிந்து கொண்ட நான், சைக்கிளை உதறித் தள்ளிவிட்டு ஓடித்தப்பிவிட்டேன். என் பின்னால் வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. மறுநாள் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த நிலையில் என் சகாக்களின் உடலைக் கண்டேன். எனவே மேற்படி படுகொலையை இராணுவத்தினரும் ஊர்க்காவற்படையைச் சேர்ந்தவர்களுமே செய்துள்ளனர் என்பது என் நம்பிக்கை.

இதையடுத்து ''லங்கா புவத்'' வெளியிட்ட பொய்ச் செய்தியை அம்பலமாக்கும் முகமாக மூதூர் பிராந்தியத்தில் ''ஒன்று படுவோம் போராடுவோம்'' எனத் தலைப்பிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. □

## தென்னிலங்கையில் வளரும் எதிர்ப்பு

### மூன்று கட்சிகளின் கூட்டணி கண்டனம்

சிறீலங்கா அரசாங்கம் புதிதாகக் கொண்டு வரவுள்ள சட்டத்தின் மூலம் இராணுவ சர்வாதிகார ஆட்சியை அமுல் படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, என்று மூன்று கட்சிகளின் கூட்டணி எச்சரிக்கை விடுத்துள்ளது. பொதுமக்களின் உணவுத் தேவை, மாணவர்களின் கல்வி, மற்றும் அத்தியாவசிய பொதுநல சேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாது, அரசாங்கம் புதிதாக உருவாக்கிவரும் படைகளுக்கும், சர்வாதிகாரப் பாதையை நிலைநிறுத்துவதற்கான புதிய ஆட்சேர்ப்புக்களுக்கும் கூடுதலான பணத்தை ஒதுக்கீடு செய்வதை லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சிறீலங்கா மக்கள் கட்சி ஆகியன மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

சிறீலங்கா அரசின் அண்மைக் காலப் போக்குகள் குறித்தும், பக்கச் சார்பான செயற் திட்டங்களின் வெளிப்பாடுகள் குறித்தும் இக் கூட்டணி கடும் ஆட்சேபனை வெளியிட்டுள்ளது. இந் நடவடிக்கைகள் தனியே தமிழ் பேசும் மக்களை மட்டுமன்றி குறைந்த நிலையில் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள அனைவரையும் பாதிக்கும் நடவடிக்கை என மேற்படி மூன்று கட்சிகளின் கூட்டணி கண்டனம் வெளியிட்டுள்ளது. ஏகாதிபத்தியச் சார்பான நடவடிக்கைகளின் போக்குகள் இலங்கை அரசியற் கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்களையும் இக் கூட்டணி கண்டித்துள்ளது. □

## அரச படைகளின்...

தனுஷ்கோடி கடற்கரையில் அடையாளம் தெரியாத வகையில் பிணங்கள் சிதைந்து கிடந்தன. கடலில் இவை பதினைந்து நாட்களாக மிதந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

**மட்டக்களப்பில் ஊர்வலம்மீது கண்ணீர்புகை - தடியடி**

இலங்கையில் மட்டக்களப்பில் அமைதியான முறையில் நடந்த ஊர்வலம் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி சிங்கள பொலீசார் தடியடி நடத்தினர். இராணுவத்தினரின் வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூரில் 16 பேரையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ம்ண்டூரில் 24 பேரையும் சிங்கள இராணுவம் சுட்டுக்கொன்றது.

காலியில் உள்ள இராணுவ முகாமில் சனிக்கிழமையன்று அதிகாலை 3மணிக்கு இரு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். போராளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அவர்கள் இந்த முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து சனிக்கிழமையன்று மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியதோடு ரூ 15 லட்சம் பெறுமானமுள்ள விசைப்படகை கடலில் மூழ்கடித்து சுமார் 3000 ரூபா மதிப்புள்ள மீன்களையும் இலங்கை கடற்படையினர் கொள்ளையடித்துச் சென்றனர்.

கல்முனையில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை நிறுத்தி 15 இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

புலொத்தை என்ற இடத்தில் இராணுவத்தினர் ஹெலிகப்டரில் இருந்து துப்பாக்கிகளால் சுட்டதில் ஆறு தமிழர்கள் கொல்லப்பட்டனர். □

### இராணுவப் பிடிக்குள் செயல்படும் கண்காணிப்புக்குழு

இலங்கையின் மூதூர் தொகுதியில் இம்மாதம் 2வது வாரத்தில் அடுத்தடுத்து நான்கு நாட்கள் இலங்கை கடற்படையினர் நடத்திய கொலை வெறித்தாண்டவம் பற்றி திருகோணமலை மக்கள் குழு, சண்டை நிறுத்தக் க்ண்காணிப்புக் குழுவிற்கு தகவல் அனுப்பியுள்ளது. இந்த நான்கு நாள் கொலை வெறித் தாண்டவம் மூதூர் தொகுதியில் மிகப்பெரும் அழிவையும் உயிர் இழப்பையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சிறீலங்கா இராணுவத்தின் இவ்வாறான நடவடிக்கைகளையடுத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி முழுக்க முழுக்க இராணுவத்தின் பிடிக்குள் உள்ள போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவைக் கலைத்து விடவேண்டுமென வலியுறுத்தியுள்ளதோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூலமாகத்தான் தமிழ்ப் போராளிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த தயாராக உள்ளார்கள் என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு தீட்சித் கூறிய செய்தியை மறுத்துள்ளது. □

### தொடரும் தாக்குதல் வரிசையில்... ஈரோஸ்

யுத்த நிறுத்த உடன்பாடுகளை மீறி ஆயுதப்படையினரின் ரோந்துகள் அதிகரித்து, தேடுதல்கள், அழித்தொழிப்புகள் மேற்கொள்ளப்பட்டபோது தற்பாதுகாப்புக் கருதி கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் சில வருமாறு:

4-9-85 கடவத்தமடு: 13 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஒரு ஜீப் முற்றாக சேதம்.

27-9-85 தெகிவத்த: இராணுவத்தினர் பன்னிருவர் கொல்லப்பட்டதுடன், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஒரு ஜீப் முற்றாகச் சேதமடைந்தது.

28-9-85 பூநொச்சிமுனை: புலனாய்வுத்துறையைச் சேர்ந்த விசேட அதிகாரிகள் ஐவர் கொல்லப்பட்டனர். சித்திரவதைகளில் கைதேர்ந்த இவர்களது இழப்பினால் புலனாய்வுச் செயற்பாடுகளில் முடக்கம் ஏற்பட்டது; சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

28-10-85 வெல்லாவெளி: பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.
31-10-85 பாலம்போட்டாறு: ஜீப் ஒன்றும், ட்ரக் ஒன்றும் கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு இலக்கானதால் கடற்படை உயர் அதிகாரியொருவர் ஊர்க்காவற்படையினர் இருவர் உட்பட ஐவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

1-11-85 திருக்கோணமடுவ: இராணுவ ஜீப் வண்டியொன்று சேதமடைந்தது. இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயம் அடைந்தனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தனிநபர்களாயிருந்த இயக்க அங்கத்தவர்களிடையே கூட்டுச்செயற்பாடு, பரஸ்பரபுரிந்துணர்வு,நேர்மையான அர்ப்பணிப்பு என்பவற்றை ஏற்படுத்தும் பலமான அத்திவாரம்.

**ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?**
**வேழ நெடும்படை கண்டு விலங்கிடும்**
**வில்லாரோ?**
**''தோழமை'' என்றவர் சொல்லிய**
**சொல்லொரு சொல்லன்றே?**
**ஏழைமை வேடன் இறந்திலன் என்றெனை**
**ஏசாரோ?**

இது கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் ஒரு பாடல், காட்டிற்குச் செல்லும் வழியில் குகனை இராமன் சந்தித்ததாகவும், அவனைத் தன் தோழன் என்று கூறியதாகவும் இதிகாசம் கூறுகிறது. இங்கே எமது கவனத்திற்கு உரியது என்னவெனில் தோழமை என்ற பதம் விளக்கப்பட்டுள்ள விதமேயாகும். இராமன் காட்டிற்குச் சென்றபின்னுல் அவனைத் தேடி வந்த பரதனையும் கூட்டத்தாரையும் கண்ட குகன், பரதன் இராமனை துரத்தி வருவதாக எண்ணி பரதன் மீது கோபப்பட்ட ஒரு தருணத்தை மேற்படி கவிதை வரிகள் மூலம் கம்பன் வர்ணித்துள்ளான். தோழமை என்று இராமன் கூறிவிட்டானே என்பதற்காக ஆறுகடக்கும் பரதனின் முயற்சியைத் தடுக்கவும் அப்படித் தடுக்கும் போது எதிர்ப்படக்கூடிய யானையை நிகர்த்த படையை முறியடிக்கும் தெம்பையும் கொண்டிருந்தது மட்டுமன்றி, இத்தகையதொரு எதிர்ப்பில் ஏழை வேடனுகிய நான் இறந்தாலும் பரவாயில்லையே எனக் கூறுகின்ருன். இதுவே உன்னத தோழமையின் அடிப்படை. உயிர் காப்பான் தோழன் என்ற முதுமொழிக்கு இலக்கணமாகி ஆபத்திலும் கைகொடுக்கும் உறவுதான் தோழமை. பக்கத்தில் இருக்கும் போது மட்டும் சிரித்துப் பேசிக் கொஞ்சிக் குலாவுவதும், ஒரே கோப்பையில் சாப்பிட்டு ஒரே பாயில் படுத்துறங்குவதும் மட்டும் தான் தோழமை என்றெவரும் எண்ணினுல் அது கேவலமானது. இந்தத் தோழமை வெறுமனே வாய்க்கு வாய் 'தோழா', 'தோழர்' எனக் கூப்பிடுவதனுல் மட்டும் மலர்ந்து விடாது என்பது வெளிப்படை. இதனை புரியாத சிலர் 'தோழர்' என்பதும், 'தோழமை' என்பதும் கம்யூனிஸ்ட்டுக்களுக்கு மட்டும் தான் சொந்தம் என்ற வகையில் புரிந்திருப்பது பரிகசிக்கத் தக்கது என்றே கருத வேண்டும்.

இவ்வாருகத் 'தோழமை' என்னும பதம் தனிநபர்களில் இருந்து இயக்க அங்கத்தவர்களிடையே கூட்டுச் செயற்பாடு, பரஸ்பர புரிந்துணர்வு, நேர்மையான அர்ப்பணிப்பு என்பவற்றை ஏற்படுத்தும் பலமான ஒரே அத்திவாரமாகும். எனவே தோழாகளிடையே பதவிப் போட்டிகள் என்பதோ, குழி பறிப்புகள், கழுத்தறுப்புகள் என்பதோ ஏற்பட இடமிருக்க முடியாது. அற்ப சொற்ப சுகங்களுக்காக அல்லாமல் முழுமக்களினதும் ஒட்டு மொத்த நன்மைக்காக-துன்பப்படும் மக்களின் மீட்சிக்காக தமது சொந்த வாழ்வையும் எதிர்காலத்தையும் அர்ப்பணித்திருக்கும் போராளிகள் மத்தியில்—தோழர்களிடையில் குறுகிய சுயநல அடிப்படைகளில் போட்டியும், பூசலும் ஏற்படுமாஞல் நாம் எடுத்த இலக்கை தவறவிட்டவர்களாகி விடுவோம் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். எமது இலட்சியத்தை தவறவிட்டால், எமது பாதையில் முன்நோக்கிய தடைகளை தகர்த்து வெற்றிப்பாதையில் வீறுநடை போடவில்லையாஞல் அடுத்த சந்ததியின் பழிப்புக்கும், துன்பத்திற்கும் நாமே வழி ,சமைத்தவர்களாகி விடுவோம்.

## விடாப்பிடியும் விட்டுக் கொடுத்தலும்

எனவே தோழர்கள் தமது நடத்தையில் சில குணும்சங்களைக் கொண்டிருக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றே கருதவேண்டும். எளிமையாகவும் இனிமையாகவும் சக தோழர்களோடு பழகுவதனைக் கட்டாயப் பழக்கமாகக் கொள்ளவேண்டும். இந்த எளிமையும் இனிமையும் தான் பரஸ்பர நட்பு மலரவும், தோழமை ஏற்படவும் அத்திவாரமாகிறது. ஏனைய தோழர்கள் மத்தியில் தன்னைப் பெரியவனுகக் காட்டிக் கொள்வதும், மற்றையவர்களை விடவும் தானே இயக்கப் பற்று மிக்கவன் என்றும், நேர்மையான அர்ப்பணிப்பு தன்னிடம் மட்டுமே உண்டு என்றும் கருதுபவர்கள் போராட்டத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் நீடித்து நிலைக்கும் தன்மையற்றவர்களாக காலப்போக்கில் உதிர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கும். இனிமையாகவும், எளிமையாகவும் பழகுவதோடு, தாம் இயக்கப்போக்கில் காணும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தவும், அதேவேளை தம்மிடையே உள்ள குறைபாடுகளை ஏற்றுத் திருந்தவும் உரிய மனப் பக்குவத்தை தோழர்கள் ஒவ்வொருவரும் பெறவேண்டும். அதை விடுத்து இவர் என்ன பெரியவரோ? என்ற அடிப்படையில் எழும் குரோதங்கள் காலப்போக்கில் தனிமனித முரண்பாடுகளைத் (Personality clash) தோற்றுவித்து குழுவாதத்தையே (Groupism) வளர்க்க வழி செய்யும். தோழர்கள் இயக்க நலனை முன்னிட்டு மனந்திறந்து பேசுபவர்களாகவும், பழகுபவர்களாகவும் மிளிர வேண்டும். கொள்கை ரீதியான விஷயங்களில் விடாப்பிடியான பற்றுதலையும் உறுதியையும் காட்டும் அதேவேளை நடைமுறைப் பிரச்சனைகளில் சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுத்தலையும் வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். அதில்லாமல் கொள்கைப் பற்றற்று சேறு கண்ட இடத்தில் மிதித்து, தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிச் செல்லும் மனப்போக்கு எதிர்காலத்தில் இயக்கத்தையும், இனத்தையும் பாதிக்கும் பாரதூரமான ஒரு அம்சமாகும்.

இவ்வாருகத் தோழர்கள் நடப்பதற்கு அரசியல் முதிர்ச்சி என்பது மிகமிக முக்கியமானதாகும். நடைமுறையில் ஏற்படும் சின்னச் சின்ன வேறுபாடுகளைக் களைந்து, நாம் வரித்துக் கொண்ட இலட்சியத்தின் தொலை நோக்கையும், எமக்குள்ள பாரிய பொறுப்பையும், எமது நீண்ட பயணத்தின் தாற்பரியத்தையும் எண்ணிப் பார்த்து தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடனும், அர்ப்பணிப்பு மனுேபாவத்துடனும் செயலாற்ற வேண்டியது தோழர்கள் ஒவ்வொருவருக்கும் உரியது. நாட்டின் நாலா பக்கத்திலுமிருந்து வெவ்வேறுபட்ட குடும்ப சமூகச் சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்த நாம், ஏதோ எமது சுயதேவைகளுக்காகவோ அல்லது சொந்த முன்னேற்றத்திற்காகவோ இந்தப் பாதையை வரித்துக் கொள்ளவில்லை என்பது நிச்சயம். கொள்கை ரீதியான பிணைப்பும், உறுதியான முன்னேற்றத்திற் கொண்ட நம்பிக்கையும், தீர்க்க தரிசனமிக்க செயற்பாடுகளில் கொண்ட பிடிப்பும் தான் எம்மனைவரையும் ஒரே அமைப்பாகக் கட்டிப் போட்டுள்ளது. இந்த அமைப்பின் ஏற்றமும் வளர்ச்சியும் எம்மொவ்வொருவரையும் பெருமை கொள்ளச் செய்யும் அதே நேரம் எமது மக்களின் எதிர்காலத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் கடக்க வேண்டிய தடைகளையும் தெளிவாக்குகிறது. எனவே தோழர்கள் அனைவரும் வழிகாட்டிகள் என்ற பொறுப்பை ஏற்கக்கூடியளவுக்கு அரசியல் முதிர்ச்சி பெறவேண்டியது அவசியமானதாகும்.

## கற்றுக் கொள்ளல்

தோழர்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டியுள்ளது. கற்றுக்கொள்ளுங்கள் என்னும் போது வெறுமனே சிவப்பு மட்டை போட்ட புத்தகங்களிற் காணும் வாசகங்களை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள் என்று அர்த்தமல்ல; அல்லது இயக்கங்களின் பெயரால்-அமைப்புகளின் பெயரால் வெளிவரும் வெளியீடுகள் அனைத்தையும் பாடமாக்கிக் கொள்ளுங்கள் என்றும் அர்த்தமல்ல. அல்லது புரியாத தத்துவப் புத்தகங்களைப் புரட்டிக் குழப்பிக் கொள்ளுங்கள் என்பது அர்த்தமல்ல. எம்மைப்பற்றி எமது நாட்டின் பண்டைய வரலாறு தொட்டு இன்றுவரையுள்ள நிலைமை பற்றி-எமது நாட்டின் பொருளாதார வளங்களையும், அவற்றை வளர்க்கும் விதங்கள் பற்றி-இன்றைய சமூக அமைப்பின் சீர்கேடுகளையும், அவற்றைக் களையும் வழிவகைகள் பற்றி - இன்னும் இதுபோல. எத்தனையோ பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனல் இவை எல்லாவற்றையும் படிக்க முடியாவிட்டாலும் பொதுவான மேலோட்டமான அறிவையாவது பெறும் பொருட்டு வாசிக்கும் பழக்கத்தை நாம் அனைவரும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிருன் என்பது முதுமொழி. அதற்கிணங்க ஆயுதங்களை நேசிப்பதோடு திருப்தியடையாமல் வாசிப்பதிலும் எமக்குக் கிடைக்கும் நேரத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் எமது சமூகத்தையும் -மக்களையும் வழிநடத்தும் மாபெரும் பொறுப்பைச் சுமக்கும் பக்குவத்தை பெற்றவர்களாக நாம் மிளிர முடியும்.

## மாபெரும் பொறுப்பு

இன்றைய நிலையில் ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கும் நாம் ஒவ்வொருவரும் புரட்சியை நடத்துவதில் ஏதோ முன்னனுபவம் பெற்றவர்கள் அல்ல என்பது உண்மையே. அதாவது ஈழத்திலேயோ அல்லது வேறெந்த நாட்டிலேயோ புரட்சியை வெற்றிகரமாக நடாத்தி முடித்த ஒரு போராட்ட அனுபவத்தை நாம் நேரடியாகச் சந்தித்ததில்லை. எமது முன்னேர்கள் நடந்து வந்த பாதையில் இடறி விழுந்த இடங்களைப் படிப்பினையாக்கி உலக ரீதியில் மற்றைய நாடுகளில் இடம் பெற்ற புரட்சிகள், போராட்டங்கள் என்பன பற்றிப் படித்தும் கேட்டறிந்த அனுபவங்களால் சிந்தனைக்கு மெருகூட்டி இலட்சியத்தின் மீது கொண்ட தளராத உறுதியோடு வளர்ந்து வருகிறேம் என்பது வெளிப்படையானது. எனவே எமக்குள்ளே எமது செயற்பாடுகளையும்—நடவடிக்கைகளையும் பரஸ்பர புரிந்துணர்வுடன் விமர்சன ரீதியாக அணுகி மீள்பரிசீலனை செய்வதன் மூலம் எம்மைச் செழுமைப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாருன அணுகுமுறையொன்றின் மூலமே சரியான முற்போக்குவாதக் கருத்துக்களால் நாம் புடமிடப்படுவதனை உறுதிப்படுத்த முடியும். அப்போது தான் ஈழவர்களின் விருப்புக்கும் ஆதரவுக்கும் பரித்துடையவர்களாக நாம் திகழ்வதோடு எதிர்காலத்தில் எம்மவரின் அபிலாசைகளையும், வேட்கைகளையும் ஈடேற்றக் கூடியவர்களாகவும் மலர முடியும். ●

## யாவரும் கேளிரென...

## இன்னுயிர் ஈந்தும்...



தோழன் விஞேத்

காலக்காற்று
கடுமையாக வீசியதால்
ஈழம் ஏற்றி வைத்த
இலட்சிய தீபமொன்று
இப்போது
அணைந்து போயிற்று
நாட்கள், பொழுதுகள்
நல்லதாக விடியுமென்று
நம்பி இருக்கையில்
இருட் கறையைப் பூசியபடியே
ஒரு நாள் விடிந்தது
ஈழவர் இலட்சியத்தை
நாமடைந்து முடிவதற்குள்
தன் விழியை
மூடிக்கொண்டான்
ஒரு தோழன்.
இறப்பு வழக்கம் தான்
ஆஞலும்
இழப்புக்களை ஈடு செய்ய
இதயம் அழுகிறது.
நீ
தடம் பதித்த சுவடுகளில்
எம்மவர் விடுதலையை
முன்னேக்கிய பாதைகளில்
முன் செல்ல முனைகின்றேம்
உன் நினைவுகளோடு
ஆழமாய் தடம் பதிப்போம்

02-09-63ல் ஈழத்தின் மண்ணுக்கு அறிமுகமான தோழன் ஆசீர்வாதம் அல்போன்ஸ் ஜெயானந்தன் தன் பெற்றேருக்கு ஒன்பது சகோதரிகளுடன் பிறந்த ஒரே மகனுவான். ஈழ விடுதலையின் பால் நாட்டமும், சமத்துவ சமதர்ம சமூக அமைப்பொன்றை உருவாக்கும் வேட்கையும் கொண்டு ஈழப் புரட்சி அமைப்புடன் தன்னை முழுமையாக அடையாளப்படுத்திஞன். கடந்த இருவருடங்களுக்கும் மேலாக அமைப்பின் வேலைகளில் முன்னின்று பல முக்கிய பொறுப்புக்களைச் சுமந்திருந்த தோழன் விஞேத்,கடந்த 01-11-85ல் அரசு கூலிப்படைகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிஞன் என்னும் சோகத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறேம். ■

## சட்டவிரோதமான துப்பாக்கித் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

அம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள தங்காலை, பெலியத்தை ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக இயங்கி வந்த துப்பாக்கித் தொழிற் சாலைகள் பொலீசாரால் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக அறிய வருகிறது. இந்தத் துப்பாக்கித் தொழிற்சாலையிலிருந்து 119 சாதாரண நாட்டுத் துப்பாக்கிகளை பொலீசார் 2-11-85 அன்று கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. தென்னிலங்கையில் துளிர் விடத் தொடங்கியிருக்கும் புரட்சிவாதிகளே இத்தொழிற்சாலைகளின் சூத்திரதாரிகளாக இருக்கலாம் என நம்பப் படுகிறது. ■

## தனியார் மயமாக்கலுக்கு கடும் எதிர்ப்பு

அரசாங்க நிறுவனங்களான கூட்டுத் தாபனங்கள் மற்றும் பெருந் தோட்டங்கள் என்பவற்றை நிர்வகிப்பதில் ஏற்பட்ட நட்டம் காரணமாக மூடிவிட அல்லது தனியாருக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. வரவு—செலவுத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் 8000 கோடிக்கும் அதிகமாகத்துண்டு விழும் தொகையைச் சமாளிக்க இது போன்ற நடவடிக்கைகள் உதவும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆஞல் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களும், மற்றும் இடது சாரித் தொழிற்சங்கங்களும் இந் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொதுமை

**பா**துகாப்புக் காரணங்களால் இடம்பெயரும் மக்களின் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. இடம்பெயரும் மக்கள் ஆங்காங்குள்ள அகதிகள் முகாம்களில் நல்லெண்ணம் கொண்டவர்களினுல் பராமரிக்கப்படுகின்றனர். இந்த மக்களுக்குதவ அரச உயர்பீடம் திட்டவட்டமாக மறுத்துவிட்டது. கலவரங்களால் பாதிக்கப்பட்டு, உடைமையிழந்தும், உற்ருரின் உயிரிழந்தும், கலவரமுற்று உயிரைக் கையில் பிடித்தபடி பாதுகாப்புத் தேடிய இவர்களுக்கு 'கஞ்சி' வார்க்கும் கருணைகூட அரசுக்கு இல்லாமல் போய்விட்டது விந்தையல்ல.

இதேவேளை எந்த இழப்புமின்றி வெறும் அச்சத்தினுல் தங்கள் குடியிருப்புக்களை விட்டுச்சென்ற— சிங்கள— மக்களுக்கு போதுமான வசதிகளும், உதவி ஒத்தாசை புரிவதோடு மட்டுமின்றி, மீண்டும் குடியேறுவோருக்கு பாதுகாப்புப் பயிற்சியும் ஆயுதமும் வழங்கப்படுவதனையிட்டு நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாவோம். எனவே எந்த அரசியல் காரணமுமின்றி போர்த்தந்திர முறைகளில் தெளிவின்றி அப்பாவிகளான கிராம மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களால் சிங்கள மக்களனைவரையுமே ஈழப்போராட்டத்தின் எதிரிகள் என்ற நிலைக்குத் தள்ளிச் செல்வது வரவேற்கப்படக்கூடியதல்ல என்பதே எமது கருத்தாகும். ●

நாடற்றவர் ......

*1-ம் பக்கத் தொடர்ச்சி....*

இந்தப் போராட்டப் பரம்பரை மடிந்துவிடவும் இல்லை; இவர்களின் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதுமில்லை என்பதையே இ.தொ.கா. பொதுச்செயலாளர் எம்.எஸ் செல்லச்சாமியின் அண்மைய பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

அண்மையில் மஸ்கெலிய சின்ன நடுத்தோட்டத்தில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் திரு. செல்லச்சாமி பின்வருமாறு குறிப்பிட்டார். இன்று நாட்டில் அகதிகளாயிருக்கும் 90 ஆயிரம் பேரில் கணிசமான தொகையினர் மலையக மக்கள். இதுதவிர 60 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் 'பயங்கரவாதி' களெனக் கணிக்கப்பட்டு பலமாதக் கணக்காக சிறையில் வாடுகின்றனர். இந்த அறுபது இளைஞர்களும் விசாரணை செய்யப்பட்டு விடுதலையாக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் இந்த அறுபது பேரையும் விடுவிக்க ஆறு லட்சம் தொழிலாளர்களும் போராட்டத்தில் குதிக்க நேரிடும் என எச்சரித்தார். தோட்டத்தொழிலாளர் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் மேற்கொண்டால் சுமார் 15 கோடி ரூபா நஷ்டம் உண்டாகும்; எனவே அந்நியச் செலாவணியைப் பெருமளவில் பெற்றுக்கொடுக்கும் மலையக மக்களின் அடிப்படையான மனித உரிமைப் பிரச்சினை டிசம்பர் 31 க்கு முன் தீர்க்கப்படாவிட்டால் நாம் பெரும் போராட்டத்தை நடாத்த வேண்டியிருக்கும் எனக் கூறியிருக்கின்ருர்.

இதிலிருந்து மலையக மக்களின் நலன்களுக்கும், ஈழத்தின் விடுதலைக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு புலனுகும். ஒரு தமிழ் பேசும் மகன் நாடற்றவன் என்ற நிலை இருக்கும்வரை—மலையக மக்களின் மீதான அடக்கு முறைகள் நீடிக்கும்வரை—மலையகத்தின் மீது அந்த மக்களுக்கு உள்ள பிணைப்பு உறுதியாக்கப்படும்வரை ஈழப் போராட்டம் ஓயாது. ஈழவர் இன்னல் தீராது. எனவே அரசியல் தீர்வு என்பதும், வடக்கு, கிழக்கு, இணைந்த மாநிலசபையொன்றுடன் 'ஈழப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பதும் பகற்கனவு.

இறுதியாக, ஆனுல் உறுதியாக ஒன்று. நியாயமான போராட்டங்களின் பின்னுல் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பிற்போக்கானதோ, பிழையானதோ அல்ல எனினும் பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் தாங்கள் மக்களுக்காகவே பேச்சுவார்த்தை நடத்துகிருேம், மக்களுடன் சேர்ந்தே போராடுகிருேம் என்பதை மறக்காமல் இருக்கும் வரைக்கும் மட்டுமே பேச்சுவார்த்தைகள் ஆரோக்கியமானதாயிருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எத்தனையோ பாரிய போராட்டங்களையும், தியாகங்களையும், இழப்புக்களையும் தாங்கிக் கொண்ட மலையக மக்களின் வாழ்வில் அடிப்படை மாற்றம்கூட இன்னும் ஏற்படவில்லை. இவர்களின் வாழ்வில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் அந்தஸ்தினைப் பெறும் போராட்டம் வெறுமனே இன உணர்ச்சி எல்லைக்குள் மட்டும் குறுக்கிக்கொள்ளக் கூடியதல்ல. அடிப்படையான சாதாரண மக்களின் வர்க்க விரோதிகளை வெல்லும் மாபெரும் பொறுப்பையும் உள்ளடக்கியதொன்ருகும். ●

## நாடற்றவர் பிரச்சினை..

**ம**லையக மக்களை நாடற்றவர்களாக்கி அவர்களது வாக்குரிமையைப் பறித்த இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தினத்தை யொட்டி ''ஈரோஸ்'' இயக்கம் விடுத்த கோரிக்கையின்படி நேற்று ஈழமெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனையவை ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன. யாழ் நகரின் சில பகுதிகளில் நேற்று முன் தினமிரவும் நேற்றுக் காலையும் குண்டு வெடிப்புகளும் இடம் பெற்றன. வர்த்தகஸ்தாபனங்கள், பாடசாலைகள், மற்றும் பொதுமக்கள் நடமாடும் அரச அலுவலகங்கள் யாவும் செயலற்றுக்கிடந்தன.

ஈழநாடு ஈழமுரசு 16-11-85

**த**மிழர் குழுக்கள் எல்லாவற்றையும் பயங்கரவாதிகள் எனக் கூற முடியாது. சிறு குழுவினர் மாத்திரமே இவ்வாருன செயல்களில் ஈடுபடுகின்ருர்கள் என்று திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் இலங்கையின் மலைத்தோட்டப் பகுதிகளில் இளைஞர்களும் மாணவர்களும் தொடர்ந்து சகட்டுமேனிக்குக் கைது செய்யப்படுவார்களாஞல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளது போன்ற நிலவரம் மலைத் தோட்டப் பகுதிகளில் உருவாகும் என எச்சரித்ததுடன் தேயிலை, ரப்பர் தோட்டப் பகுதிகளில் தமிழர்கள் அமைதியாக வாழ விரும்புகின்றனர், ஆனுல் இவ்வாறு கைது செய்யப்படும் நிகழ்ச்சிகளால் இப்பகுதி மக்கள் அமைதியை இழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். ●



# ஸ்ரீலங்கா 'ஹிட்லரின்'(!) வாக்குமூலம்:

*கிழக்கில் இந்த தீவிரவாதிகள் பலம் வாய்ந்தவர்களாக உள்ளனர்.*

*24 மணித்தியாலத்துக்குள் முழுத் தமிழரையும் அழித்து விடுவேன்.*

INDIA TODAY சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் போது இவ்வாறு கூறிய இலங்கை ஜனுதிபதி தொடர்கையில் நாட்டினைக் கைப்பற்றுவதற்கான மார்க்சிய—லெனினிய வாதிகளின் திட்டமே இந்த ஈழக்கோரிக்கை எனவும் கூறி, ராஜீவ் காந்தியும், இந்திரா காந்தியும், தமது அரசியல் நலம் கருதியே 'தமிழர்' பிரச்சினையைக் கையாண்டனர் எனவும், சிறிலங்காவை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ராஜீவ் காந்தி முயலமாட்டார், ஆனுல் அவ்வாறு நடக்க முயல்வாராயின் இந்தியாவினுல் 24 மணி நேரத்தில் இலங்கையைக் கைப்பற்றி என்னைக் கைதுசெய்யவும் முடியும்—அவ்வாறு செய்ய முயல்வார்களாயின் ஒரு தமிழர் கூட உயிரோடு இருக்கமாட்டார் எனவும் கூறினுர்.

மேலும் தனது பேட்டியின் போது தீவிரவாதிகள் வன்முறையினைத் தொடர்வார்களாயின் தீவிரவாதிகளுடன் கலந்துரையாடுவது சாத்தியமற்றது எனவும், 'போர் நிறுத்தம்' தமது இராணுவத்தை நன்கு பலப்படுத்தவும் பயிற்சியளிக்கவும், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும் வழி வகுத்துள்ளது; நாம் தமிழர்களை அவர்களது பாரம்பரிய பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் வகையிலான முயற்சி போன்றே இந்தத் தீவிரவாதிகளும் மேற்கொள்ளுகின்றனர் எனவும் விளக்கியுள்ளார். இஸ்ரேலியர்கள் தமது நண்பர்கள். இவர்கள் தமது இராணுவத்திற்கு பல வழிகளிலும் உதவி வருகின்றனர். அமெரிக்க ஐக்கிய இராச்சியம் தமது பக்கமே சார்ந்துள்ளது; முன்னர் இந்தியாவின் பக்கம் சார்ந்திருந்த ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இன்று சிறிலங்காவினை ஆதரித்து வருகின்றன.

முடிவாக யாழ்குடா நாட்டில் இராணுவ நடவடிக்கை மூலம் முடிவினை ஏற்படுத்த முற்ருன தயார்நிலையில் தாம் இல்லையாயினும் ஏனைய மாகாணங்களை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், உணவு போன்றவற்றை வழங்குவதை நிறுத்திக் கொள்வதன் மூலம் தீவிரவாதிகளை ஒருமாத காலத்தினுள் அழிக்க முடியும் எனவும் ஜனுதிபதி விளக்கியுள்ளார். □

## சமரச மாற்றுத்திட்ட முயற்சி

சர்வகட்சி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட மாகாணசபை யோசனை அப்போதே எம்மால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதனையே மீண்டும் புதிய நகல் திட்டமாக இலங்கை அரசு தயாரித்துள்ளது. 'என திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளதோடு' இது குறைந்தபட்ச கோரிக்கையைக் கூட வழங்கவில்லை எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் தமிழீழக் கோரிக்கைக்குமாருக வடக்கும், கிழக்கும் இணைந்த ஏதாவது ஒரு அமைப்பை உருவாக்கும்யோசனையை இலங்கை அரசு சமர்ப்பித்தால் அதனைப் பற்றிபரிசீலனைசெய்யமுடியும் என்று சொன்ன திரு. அமிர்தலிங்கம் இத்தனை இழப்புகளின் பின்னர் தனித்தனியான மாகாணசபைகளை ஏற்பதென்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் முடியாத காரியம் என்ருர்.

இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண்பது ''சாத்தியமானது, ஆனுல் விரும்பத்தக்கதல்ல'' என்று அதிபர் ஜெயவர்த்தனு கூறியதைத் தொடர்ந்து இந்தியா, இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாதெனவும் பேச்சுவார்த்தைமூலமே உடன்பாடு காண்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்றும் இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. இவைகளையடுத்து இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து டெல்லி சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து இந்திய அரசும் இலங்கை அரசும் கூட்டாகத் தயாரித்த சமரச நகல்த்திட்டத்திற்கு மாற்று சமரசத்திட்டத்தை பிரதமர் ராஜீவ்காந்தியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அளித்தார். இலங்கைத் தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கான எல்லா அம்சங்களும் சமரசமாற்றுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன எனவும் இப்போது அதுபற்றி விரிவாகக் கூறமுடியாது என அவர் தெரிவித்தார்.

T.U.L.F., தந்துள்ள விரிவான மாற்றுப் பிரேரணை குறித்து வங்கதேசத்தில் இம்மாதம் 7ம், 8ம் திகதிகளில், ஜெயவர்த்தனுவைச் சந்திக்கும் பொழுது, ராஜீவ் காந்தி விவாதிப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இந்திய வெளிவிவகார அமைச்சர் 'பாலிராம் பகத்' கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் சண்டைநிறுத்த மீறல்கள் நிற்க வேண்டும் என்பது T.U.L.F., இன் பிரேரணைகளில் ஒன்று. சண்டை நிறுத்த மீறல்கள் நிற்க வேண்டும் என்று இலங்கை அரசு விரும்புகின்றது. இலங்கையில் சண்டை நிறுத்த மீறல்களும் வன்முறைச் சம்பவங்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும் என இந்தியா விரும்புகின்றது என்ருர். □

வெளியீடு :

**ஈழப்புரட்சி அமைப்பு**

[EROS]

15-11-85, அன்று ஈழத்தில் வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக 20-12-85ல் பதிப்பித்து சென்னையில் வெளியிடப்பட்டது.

***அன்பளிப்பு : ரூபாய் 2***

தொடர்பு முகவரி:
ஈழம்
த. பெ. எண்: 2356
சென்னை
600 024

**நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்